திட்டக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : கோ. முரளிதரன் B.Sc,

(ந.க.எண்:1441/2025/எப்1) நாள்.06.03.2026

பொருள் : மனைப்பிரிவு– திட்டக்குடி நகராட்சி – வதிட்டபுரம் கிராம சர்வே எண்கள். 230/1Aல் 0.97 ஏக்கர் (அ) 3950 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவினை –அங்கீகரித்து இறுதி உத்தரவு வழங்குதல் தொடர்பாக

பார்வை :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் இணைய வழி கடிதம் ந.க..எண் ந.க.எண். NoK0E27JPD/2025/TCP நாள். 02/08/2025
2. நகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட தானப்பத்திரம் எண். 1331/2025.
3. சார்பதிவாளர், திட்டக்குடி அவர்களின் கடித ந.க.எண்.202/2025 நாள். 19/11/2025
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள். 22/10/2025 மற்றும் 20.11.2025
5. நகராட்சி பொறியாளர், திட்டக்குடி அவர்களின் குறிப்புநாள். 22/10/2025
6. திரு. செ. சுதாசன் த/பெ செல்வராஜ்14, பெருமாள் கோயில் தெரு,திட்டக்குடி, என்பவரின் மனு நாள்.06/08/2025
7. இந்நகராட்சி மன்ற தீர்மான எண்.522 நாள். 04/03/2026

****

பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் இணைவழி நடவடிக்கைகள் கடிதத்தில் திட்டக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வதிட்டபுரம் கிராம சர்வே எண். 230/1Aல் 0.97 ஏக்கர் (அ) 3950 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண். (111/2025) என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் மனுதாரரின் கடிதத்தில் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். (1331/2025) ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டது. சிறப்பு நிபந்தனை எண்.3ல் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை நகராட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உரிமை மாற்றம் செய்து சர்வே எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள் 4–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலபயன்மாற்ற கட்டணமாக அரசுக்கு செலுத்த பார்வை 3–ல் காணும் சார்பதிவாளர், திட்டக்குடி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பின்படியும் மற்றும் பார்வை 5ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி மனைப்பிரிவில் தெருவிளக்கு வசதிக்கான கட்டணங்கள் பார்வை 4–ல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் கட்டணங்கள் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனைப்பிரிவுதாரரால் கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	விவரம்	தொகை	கட்டணம் செலுத்திய விபரம்
1	நிலபயன்மாற்றக்கட்டணம்	ரூ.10200/-	E.Ch.No.20260218019941 நாள்.18.02.2026
2	கூராய்வு கட்டணம்	ரூ.20000/-	Rec.No.181/TMO /01/25-26/0009819 நாள்.09.01.2026
3	மனைப்பிரிவு அனுமதி கட்டணம்	ரூ.20000/-	
4	வைப்புத்தொகை	ரூ.100000/-	
5	தெருமின் விளக்கு கட்டணம்	ரூ.90000/-	Rec.No.181/TMO /01/25-26/0009820 நாள்.09.01.2026
6	கொடி நாள் தொகை	ரூ.10000/-	Ref No. FL24914752420 நாள்.09.01.2026
மொத்தம்		ரூ.250200/-	

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்திடவும் மற்றும் மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள் 1414.74 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு 50.62 ச.மீ நிலங்களை ஏற்கவும் பார்வை 7ல் காணும் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 522 நாள். 04.03.2026ல் அனுமதி அளித்துள்ளது.

திட்டக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வதிட்டபுரம் கிராம சர்வே எண்கள். 230/1Aல் 0.97 ஏக்கர் (அ) 3950 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண். 111/2025 (இணையதள ஒப்புதல்) பார்வை 1-ல் காணும் கடிதத்தில் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

06/3/26

ஆணையாளர்

திட்டக்குடி நகராட்சி

6/3/26

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம் -1

பெறுதல்:

திரு. செ. சுதாசன் த/பெ செல்வராஜ்,

14, பெருமாள் கோயில் தெரு,

திட்டக்குடி

நகல்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர்
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திட்டக்குடி .
3. உதவி இயக்குநர் (நில அளவை) கடலூர் மாவட்டம்.